இந்தியாவில் நெருக்கடியில் ஜனநாயகம் –

‘வாயை மூடியபடி மோடி’ புகைப்படம்!

இங்கிலாந்து பத்திரிகை விமர்சனம்!

புதுடெல்லி,ஜூலை.10–

இந்தியாவில் ஜனநாயகம் மற்றும் கருத்துச் சுதந்திரம் நெருக்கடியில் இருப்பதாக கூறும் வகையில் பிரதமர் மோடி வாயை மூடியபடி இருக்கும் அட்டைப்படத்தை இங்கிலாந்தின் முன்னணி பத்திரிகையான ‘பிரிட்டிஷ் ஹெரால்டு’ வெளியிட்டு உள்ளது. இங்கிலாந்தின் முன்னணி பத்திரிகையான பிரிட்டிஷ் ஹெரால்டு ‘இந்தியாவில் சிறுபான்மையினருக்கு எதிரான கடுமையான விதிமுறைகளும் வன்முறைகளும்; எச்சரிக்கை மணி ஒலிக்கிறது’ என்ற தலைப்பில் கட்டுரை வெளியிட்டுள்ளது. அந்த பத்திரிகையின் அட்டை படத்தில் வாயை மூடிக்கொண்டு பிரதமர் மோடி இருக்கும் புகைப்படம் வெளியிடப்பட்டுள்ளது. மோடி படத்திற்கு கீழே, ஜனநாயகம் தீப்பற்றி எரிவது போல் காட்டப்பட்டு உள்ளது.

மேலும் இந்த அட்டைப்படம் பிரிட்டிஷ் ஹெரால்டு பத்திரிகையின் அதிகாரப்பூர்வ டிவிட்டர் பக்கத்திலும் வெளியிடப்பட்டு உள்ளது. பத்திரிகையில் வெளியிடப்பட்டு உள்ள கட்டுரையில் இந்தியாவில் சிறுபான்மை மக்கள் மீதான தாக்குதல்கள் குறித்து பிரதமர் மோடி தொடர்ந்து மவுனம் காத்து வருகிறார். ஊடகங்களுக்கு பதில்

சொல்லக்கூட அவர் தயாராக இல்லை. அவர் தனது சமீபத்திய அமெரிக்க பயணத்தின் போது 8 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் முறையாக அதிபர் பைடனுடன் சேர்ந்து ஊடகங்களைச் சந்தித்தார் என்று குறிப்பி டப்பட்டு ள்ளது.

மணிப்பூர் கலவரம் தொடர்பாகவும் அந்த கட்டுரையில் பல தகவல்கள் இடம் பெற்றுள்ளன. மேலும் 2002 குஜராத் கலவரத்தின் போது மோடி மவுனம் கடைப்பிடித்ததை போல மணிப்பூர் கலவரத்தின் போதும் மவுனத்தை கடைபிடிப்பதாக அந்தக் கட்டுரை குற்றம் சாட்டுகிறது.

மேலும் மல்யுத்த வீராங்கனைகளின் பாலியல் புகார் தொடர்பாகவும் கட்டுரையில் குறிப்பி டப்பட்டுள்ளது. 2014ல் 140 ஆக இருந்த பத்திரிக்கை சுதந்திரம் குறித்த இந்தியாவின் நிலை மோடி ஆட்சியில் 161 ஆக சரிந்து ள்ளது என்றும் கட்டுரை சுட்டிக்கா ட்டுகிறது. உலகி லேயே இந்தியாவில்தான் அதிக இணையத் தடைகள் உள்ளதாகவும் அது கூறுகிறது. இதே ‘பிரிட்டிஷ் ஹெரால்டு’ பத்திரிகைதான் 2019ம் ஆண்டு ஜூலை 15ம் தேதி பிரதமர் மோடியை ‘‘உலகின் சக்திவாய்ந்த நபர்” என்று வர்ணித்து இருந்தது. கொரோனா தொற்று நெருக்கடியைக் கட்டுப்படுத்துவதிலும், இந்தியாவில் தடுப்பூசி உற்பத்தியை அதிகரிப்பதிலும் மோடியின் தலைமை யை பாராட்டி செய்தி வெளி யிட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (09.07.2023) காஞ்சிபுரம் மாவட்டம், கோவூர், சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.99 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக உருவாக்கப்படவுள்ள திருத்தேர் திருப்பணியை தொடங்கி வைத்தனர். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், மண்டல இணை ஆணையர் திருமதி இரா. வான்மதி மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

ரூ. 99 லட்சம் மதிப்பீட்டில் – கோவூர்,

சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்கு புதிய திருத்தேர்!

அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தனர்!

சென்னை,ஜூலை.10-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் இன்று (09.07.2023) காஞ்சிபுரம் மாவட்டம், கோவூர், சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் ரூ.99 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக உருவாக்கப்படவுள்ள திருத்தேர் திருப்பணியை தொடங்கி வைத்தனர்.

அமைச்சர் தா.மோ. அன்பரசன் பேச்சு!

இந்நிகழ்ச்சியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன் பேசியதாவது:

1008 சிவாலயங்களில் தொன்மை வாய்ந்ததும், தெய்வச் சேக்கிழார் பெருமான் மற்றும் தெய்வ தியாகராசரால் பாடல் பெற்றதுமான சிறப்பினை உடையது சுந்தரேசுவர் திருக்கோயிலாகும். இது சென்னையைச் சுற்றி அமைந்துள்ள நவகிரக தலங்களில் புதன் கிரகத்துக்குரிய பரிகாரத் தலமாக திகழ்கிறது.‘ இத்திருக்கோயின் திருத்தேர் சிதலமடைந்த நிலையில் இப்பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று ரூ. 99 லட்சத்தில் புதிய திருத்தேர் அமைக்க இன்று பணி தொடங்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கு இந்து சமய அறநிலையத்துறை மூலம் ரூ.50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ள இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுக்கு இப்பகுதி மக்கள் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மீதமுள்ள தொகையினை நம் பகுதி மக்கள் உபயதாரர் பங்களிப்பாக வழங்க ஒப்புதல் வழங்கி அதில் 80 சதவீத நிதியை வழங்கியுள்ளோம். அதேபோல இந்த கோயில் கும்பாபிசேக பணிகளுக்காக ரூ.70 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே இரண்டு பணிகளை ஒருங்கே முடித்து அடுத்த எட்டு மாதத்தில் கும்பாபிசேகத்தை நடத்தி, திருத்தேரையும் வீதி உலா வர செய்திடும் வகையில் நமது பணிகள் அமைந்திட வேண்டும். அதற்கு தேவையான அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்கிட தயாராக உள்ளேன்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் குன்றத்தூரை சுற்றி நவக்கிரங்களுக்கும் தலங்கள் அமைந்துள்ளன. நவக்கிரகங்களை தரிசிக்க தஞ்சாவூர், நாகப்பட்டினம் பகுதிகளுக்கு செல்ல இயலாதவர்கள் பயன்பெறும் வகையில் நமது பகுதியை சுற்றி அமைந்துள்ள கொளப்பாக்கம், சோமங்கலம், மாங்காடு, போரூர், குன்றத்தூர் திருநாகேஸ்வரம், கிருகம்பாக்கம் மற்றும் பூவிருந்தவல்லி பகுதிகளில் அமைந்துள்ள நவக்கிரக தலங்களை விளம்பரப்படுத்தி நவக்கிர சுற்றுலா ஏற்பாட்டினை இந்து சமய அறநிலையத்துறை செய்து தந்திட வேண்டும். இக்கோயிலுக்கு விரைவில் அமைக்கப்பட உள்ள அறங்காவலர்

குழுவினரோடு நாம் அனைவரும் இணைந்து பணியாற்றி இந்த திருக்கோயிலை மேம்படுத்துவோம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அமைச்சர் பி.கே. சேகர் பாபு பேச்சு!

அதனைத் தொடர்ந்து இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசில் இந்து சமய அறநிலையத்துறை எந்த காலத்திலும் இல்லாத வகையில் வரலாற்றை பதிவு செய்து இறையன்பர்களின் பொற்காலமாக திகழ்ந்து வருகிறது. விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் மாவட்டம், பூவரசன்குப்பம் லட்சுமி நரசிம்மசுவாமி திருக்கோயிலில் 2012 ம் ஆண்டில் ரூ24 லட்சம் மதிப்பீடு போடப்பட்ட அளவிலே இருந்த திருத்தேர் திருப்பணி. இவ்வரசு பொறுப்பேற்ற பின் ரூ 60 லட்சம் திருத்திய மதிப்பீட்டில் பணிகளை விரைவுபடுத்தி முடித்து 150 ஆண்டுகளுக்குப் பிறகு வெகு சிறப்பாக நேற்றைய தினம் திருத்தேரோட்டம் நடைபெற்றுள்ளது.

இந்த பகுதிக்கு அருகே உள்ள சீட்டணஞ்சேரியில் சுமார் 80 ஆண்டுகளுக்குப் பிறகு திருத்தேர் உருவாக்கப்பட்டு கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்பு தேரோட்டம் நடைபெற்றது. இன்றைய தினம் சௌந்தராம்பிகை உடனுறை சுந்தரேஸ்வரர் திருக்கோவிலின் தேர் 30 ஆண்டுகளாக முன்பே சிதிலமைந்த நிலையில், இன்றைய தினம் மாவட்ட அமைச்சர் தா.மோ. அன்பரசன் உதவியுடன் உபயதாரர்கள் மூலம் திரட்டப்பட்ட நிதி சுமார் ரூ.49 லட்சம் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை நிதி ரூ.50 லட்சத்தையும் சேர்த்து 99 லட்சம் ரூபாய் செலவில் திருத்தேர் செய்கின்ற பணியை தொடங்கி வைத்துள்ளோம்.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு பெரியபாளையம் பவானி அம்மன் திருக்கோயில், நங்கநல்லூர் ஆஞ்சநேயர் திருக்கோயில், புரசைவாக்கம் கங்காதேஸ்வரர் திருக்கோயில் ஆகிய 3 திருக்கோயில்களில் புதிய தங்கத் தேர்களும், சென்னை, காளிகாம்பாள், இருக்கன்குடி, திருத்தணி, திருக்கருக்காவூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய திருக்கோயில்களுக்கு 5 புதிய வெள்ளித்தேர்களும் செய்யும் பணிகளும், சுமார் ரூ.31 கோடி செலவில் 51 புதிய மரத்தேர்களும் செய்யும் பணிகளும், ரூ.4.17 கோடி மதிப்பீட்டில் மரத்தேர் மராமத்து பணிகளும் நடைபெற்று வருகின்றன.

அதேபோல குடமுழுக்குகள் அதிகமாக நடைபெற்ற ஆட்சியாக இந்த ஆட்சிதான் திகழ்கிறது. திருவட்டாறு திருக்கோயிலில் 390 ஆண்டுகளுக்கு பிறகு கடந்த ஆண்டும், சுமார் 123 ஆண்டுகளுக்குப் பிறகு திருநெல்வேலி அரிகேசவநல்லூர் அரியநாத சுவாமி திருக்கோயிலில் கடந்த வாரமும் குடமுழுக்கு நடைபெற்றது. இன்றைய தினம் வரை 862 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளன. கோவூர் சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்கு 2008 ஆம் ஆண்டு குடமுழுக்கு நடைபெற்று இருக்கின்றது ஆகம விதிப்படி 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெற வேண்டும் என்பதால் சுமார் ரூ. 70 லட்ச ரூபாய் செலவில் 12 திருப்பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வரும் ஆவணி மாதம் பாலாலயம் செய்ய உள்ளோம். நில மீட்பை பொறுத்தவரையில் ரூ. 4,795 கோடி மதிப்பீட்டிலான 5,060 ஏக்கர் பரப்பளவு நிலங்களை இறைச்சொத்து இறைவனுக்கே என்ற வாக்கிற்கிணங்க ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து கைப்பற்றிய ஆட்சி தமிழக முதல்வரின் ஆட்சியாகும். இறையன்பர்களுடைய அடிப்படை தேவைகளை மகிழ்ச்சியோடு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்ற ஒரு துறையாக இன்றைக்கு இந்து சமய அறநிலையத்துறை திகழ்கிறது.

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் நடைபெற்ற திருமணங்கள் சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்பு நிறுத்தப்பட்டிருந்த நிலையில் திருக்கோயில்களின் சார்பில் திருமணம் நடத்திட வேண்டும் என்று முடிவு எடுத்து கடந்த ஆண்டு 500 திருமணங்கள் இலவசமாக நடத்தப்பட்டன. இந்த ஆண்டு 600 திருமணங்கள் நடத்திட அறிவிக்கப்பட்டு, முதற்கட்டமாக முதலமைச்சர் தலைமையில் சென்னையில் 34 திருமணங்களும், பிற மண்டலங்களில் 219 திருமணங்களும் நடத்தப்பட்டுள்ளன. தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற திருமணம் கருணை உள்ளத்தோடு நடைபெற்ற திருமணமாகும். பாஜக தலைவர் அண்ணாமலை நடத்தி வைத்த திருமணம் விளம்பரத்துக்காக நடத்தப்பட்ட திருமணம். விளம்பரத்திற்காக நடத்தப்படுகின்ற திருமணங்கள் இப்படித்தான் அமையும் என்பதற்கு அண்ணாமலை நடத்தி வைத்த திருமணங்களே சாட்சியாகும்.

இந்த அரசு பொறுப்பேற்ற பின் 80 ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த திருவண்ணாமலை, தென்முடியனூர், முத்துமாரியம்மன் திருக்கோயில், 12 ஆண்டுகளுக்கு மேலாக மூடப்பட்டிருந்த மதுரை கள்ளிக்குடி வாலகுருநாத சுவாமி திருக்கோயில், சேலம் மாவட்டம், திருமலைகிரி மற்றும் வடகுமரை மாரியம்மன் திருக்கோயில்கள், கரூர், வீரணம்பட்டி, அய்யனார் திருக்கோயில், விராலிமலை, முத்துமாரியம்மன் திருக்கோயில் உள்ளிட்ட 9 திருக்கோயில்கள் பக்தர்கள் தரிசனத்துக்கு திறக்கப்பட்டுள்ளது. மேல்பாதியில் இயல்பு நிலை ஏற்பட்ட பிறகு திருக்கோயிலை திறக்க அனைத்து பணிகளையும் அரசு மேற்கொண்டு வருகின்றது. இப்படி பல ஆண்டுகளாக தீர்க்கப்படாத பிரச்சனைகளுக்கும் முடிவை ஏற்படுத்துகின்ற வகையில் இந்த ஆட்சி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், மண்டல இணை ஆணையர் திருமதி இரா. வான்மதி, ஒன்றியக்குழு துணைத் தலைவர் திருமதி உமாமகேஸ்வரி, ஒன்றியக்குழு உறுப்பினர் அன்பழகன், ஊராட்சி மன்றத் தலைவர் பா.சுதாகர், வந்தே மாதவரம், எத்திராஜ், அறங்காவலர் குழுத் தலைவர் செந்தாமரைக்கண்ணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அதிகரிக்கும் கிராமப்புற வேலைவாய்ப்பின்மை!

மார்க். கம்யூ. பொதுச் செயலாளர் சீத்தாராம் யெச்சூரி குற்றச்சாட்டு!

புதுதில்லி, ஜூலை.8

மோடியின் கொள்கைகள் தேசியச் செல் வத்தைக் கொள்ளையடிப்பதாக உள்ள நிலையில், கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பின்மை தொடர்ந்து அதிகரித்து வருகிறது என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் சீத்தாராம் யெச்சூரி குற்றம் சாட்டியுள்ளார்.

2023 ஜூன் மாதத்தில் நாட்டின் கிராமப்புற வேலையின்மை இரண்டாண்டுகளில் இல்லாத விதமாக 8.73% ஆக உயர்ந்து, ஜூன் மாதத் திற்கான நாட்டின் மொத்த வேலையின்மையை 8% ஆக உயர்த்தியுள்ளது என இந்தியப் பொருளாதாரத்தை கண்காணிக்கும் மையம் வெளி யிட்டுள்ள தரவுகளை, அவர் ஆதாரமாக முன் வைத்துள்ளார். இந்த தரவிற்கு மற்றொரு ஆதாரமாக, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட (MGNREGS) வேலையில் சேருவோர் களின் எண்ணிக்கை ஜூன் மாதத்தில் திடீரென அதிகரித்திருப்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய ஊரக வேலைத் திட்டத்தை உற்று நோக்கினாலே கிராமப்புற வேலையின்மை ஒப்பீட்டளவில் அதிகமாக இருப்பதை திடமாகக் காணமுடியும். கடந்த ஜூன் மாதத்தில் சுமார் 4 கோடி மக்கள் (44.23 மில்லியன்) தேசிய ஊரக வேலையைத் தேர்ந்தெடுத்துள்ளனர். அதாவது தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட வேலை யில் சேருபவர்களின் எண்ணிக்கை நடப்பாண் டில் மட்டும் 2.3% அதிகரித்துள்ளதாக கிராமப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் ஆரம்பத் தரவு காட்டுகிறது. கடந்த மே மாதமும் தேசிய ஊரக வேலைகளுக்கான தேவையும் கணிசமான அளவில் அதிகரித்தது. இதுதொடர்பாக சீத்தாராம் யெச்சூரி தனது டுவிட்டர் பக்கத்தில்,”நமது பெரும்பான்மை யான மக்களின் நிலை தொடர்ந்து மோசமாகி வருகிறது. கடந்த 2 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கிராமப்புற வேலை வாய்ப்பின்மை அதிகரித்துள்ள நிலையில், கிராமப்புற உண்மை ஊதியம் 16 ஆவது மாதமாக சுருங்கி யுள்ளது. மோடியின் கொள்கைகள் தேசியச் செல்வத்தைக் கொள்ளையடிப்பதாக இருப்ப தால், அவரது கூட்டாளிகள் பெருஞ்செல்வங்க ளைக் குவிக்கின்றனர்.

இவ்வாறு அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

200 மாற்றுத்திறனாளிகளுக்கு நல உதவிகள்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் பேராசிரியர் தீபக் நாதன் வழங்கினார்!

சென்னை, ஜூலை 10-

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் ஜி.வி. நாகவள்ளி பிரபாகரன் தலைமையில் நேற்று (09.7.2023, ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணியளவில் பாடி, எம். ஜி.ரோடு, குமரன் நகர் மாநகராட்சி திடலில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழா சென்னை கிழக்கு மாவட்ட சுற்றுசூழல் அணி சார்பில் “கலைஞர் 100-14”, “முத்தமிழறிஞர் மக்கள் போராளி! முழுமையாய் உணர்ந்தவர் மாற்றுத்திறனாளி!” மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் 200 மாற்றுத்திறனாளிகளுக்கு

1. பேண்ட் ஷர்ட் 1 செட் அல்லது சேலை, 2. டவல் 1, 3. பெட்ஷீட் 1, 4. அரிசி 5 கிலோ, 5. பாரி சர்க்கரை 1கிலோ, 6. உதயம் துவரம் பருப்பு 500கிராம், 7. உதயம் உளுத்தம் பருப்பு 500கிராம், 8. உதயம் கடலைப்பருப்பு 500கிராம், 9. நாகா கோதுமை மாவு 1 கிலோ, 10. சன் லேண்ட் ஆயில் 1 கிலோ , 11. நாகா ரவை 1 கிலோ, 12. தேங்காய்ப்பூ 1 கிலோ, 13. சோப்பு பவுடர் 1கிலோ, 14. டிஷ் வாஷ் பார் 1 250கிராம், 15. குடை 1

உள்ளிட்ட பதினைந்து வகையான பொருட்களுடன் மேலும் ரொக்கமாக ரூபாய் 2000 மும் இணைத்து நலத் திட்ட உதவிகளை டிசம்பர் 3 இயக்கம் மற்றும் மாற்று திறனாளிகள் நலவாரியத்தின் பேராசிரியர் தீபக்நாதன் அவர்கள் வழங்கினார் .

இந்நிகழ்வில் அம்பத்தூர் சட்ட மன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், அம்பத்தூர் மண்டலக்குழு தலைவர் பி.கே. மூர்த்தி, அம்பத்தூர் தெற்கு பகுதி செயலாளர் டி.எஸ் .பி.ராஜகோபால், கிழக்கு பகுதி செயலாளர் எம். டி.ஆர்.நாகராஜ், மற்றும் பொதுக்குழு உறுப்பினர்களும் மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பாகமுகவர்கள் மற்றும் கழகத்தினர்கள் பொதுமக்கள் பெருந்திரளாய் வந்து கலந்து கொண்டனர்.

சி.பி.திருமலை தலைமை! க. கோவிந்தராஜ், மெட்டில்டா கோவிந்தராஜ் எம்.சி முன்னிலை!

அண்ணாநகர் 101 அ வட்டத்தில் 1000 பேருக்கு அறுசுவை உணவு!

நே.சிற்றரசு, தயாநிதி மாறன்,எம்.கே. மோகன்,ச. பரமசிவம், கார்த்திக் மோகன் வழங்கினர்!

சென்னை ஜூலை.10

சென்னை மேற்கு மாவட்டம் அண்ணாநகர் வடக்கு பகுதி 101அ வட்ட திமுக சார்பில் 1000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நேற்று (9.7.2023) ஞாயிற்றுக் கிழமை மதியம் 12 மணியளவில் சென்னை.30 செனாய்நகர் கதிரவன் காலனி சமுதாய நலக்கூடம் அருகில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் 101 அ வட்டக் கழக செயலாளர் சி.பி. திருமலை தலைமை வகித்தார்.

101 அ வட்டக் கழக செயலாளர் க.கோவிந்தராஜ்,மெட்டில்டா கோவிந்தராஜ்,பா. பிரபு, கே.பி சுரேந்தர்,ஓகே. ஓகே.குட்டி (எ) சுப்பிரமணி, கே.பாலாஜி, பி. வி.சரவணன், டி.எஸ். முரளிதரன்,எம்.கர்சன்பிரபு, சி. விக்னேஷ்வரன்,டி.டில்லிஸ், எஸ். மகேஸ்வரன், கே.பெருமாள், வி.டி.. சித்தார்த்தன், ஏ. எஸ். இளஞ்செழியன்,ஜே. திவாகர் எம்.முரளிதரன்,பி. பிரவீன் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வே.பா.தங்கமணி, வி. பழனி வேல் ராஜன், எம்.ஆனந்திமுரளி,எம்.பி.சாமி ராஜன்,ஏ.சி மோகன்ராஜ், ஜி.சக்திவேல்,எம். ஆசைத் தம்பி, கே.ரமேஷ், கே.பி. ராஜேஷ், விசுவாசம், கே. வெங்கடேசன், எல். பிரபா,ஜெ. மோகனரங்கம்,பி.இந்திராணி,சி.சாந்தி, எஸ்.கங்கா,எம். அன்பழகன், எல்.கே.ரவி, ஆர்.மாரி, வி.மதியழகன், என். குபேந்திரன், எம்.மில்லர், வி. விஜய்நேரு, ஜி.ஆர் முருகன், பி. சதீஷ்குமார், எம்.குமார்,எஸ். முத்துக்குமார் கார்த்திக்மாறன்,மா. விஜய், கே.கபாலி,கே. சாம்,மா.ஜனா, சரவணன், பரவை டி.ராஜ், சிபிடி.சுதன், கே. கன்னியப்பன், எஸ். அமானுல்லா, கே.வெங்கடேசன்,எஸ். துரைக்கண்ணன், பிஎஸ்என்எல் ராஜேந்திரன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினர்.

சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், அண்ணாநகர் சட்ட மன்ற உறுப்பினர் எம்.கே. மோகன், வடக்குபகுதி செயலாளர் ச.பரமசிவம், மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணை செயலாளர் கார்த்திக் மோகன், எஸ்.சேரன், ராணி ரவிச்சந்திரன், ஏ.டி.முருகன், கராத்தே என். ஆனந்தன், எல். ரஜினிகாந்த் ஆகியோர் கலந்து கொண்டு நல உதவிகள் வழங்கினர்.

மேலும் து.விக்டர்,ஆர். என்.துரை, வி. எஸ்.கலை, பி. சந்திரசேகர், எம்.ஜி. ரவிக்குமார், பி.ஜெய்சங்கர், அருள் கண்ணன், வசந்தி பரமசிவம், புஷ்பலதா ஜெய்சங்கர், பகுதி நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணிதுணை அமைப்பாளர்கள், மகளிர் அணி துணை அமைப்பாளர்கள், மாணவர் அணிதுணை அமைப்பாளர்கள், வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர்கள், இலக்கிய அணி துணை அமைப்பாளர்கள், மகளிர் அணி தொண்டர் அணி துணை அமைப்பாளர்கள், ஒருங்கிணைப் இளைஞர் அணி வட்டக் கழக அமைப்பாளர்கள், மகளிர் அணி,101 அ வட்டக்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

முடிவில் எம்.ஏ டேனியல் நன்றி கூறினார்.

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சி பம்மல் 1வது மண்டலத்துக்கு உட்பட்ட திருநீர்மலை பகுதியில் நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.1கோடியே 98 லட்சம் மதிப்பிட்டில் 23 புதிய தார் சாலை அமைக்கும் பணிகளை பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் துணை மேயர் கோ.காமராஜ், மண்டல தலைவர் வே கருணாநிதி,பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த.ஜெயக்குமார், மாமன்ற உறுப்பினர்கள் ஜெ.சண்முகசுந்தரி ஜெயக்குமார் , சித்ராதேவி முரளிதரன்,மாநகராட்சி பொறியாளர்கள், கே.சந்திரன், மு.ஸ்ரீதர் , இரா.குமரேசன், இரா.பாபுஜி, வட்ட கழக செயலாளர்கள் பா.ஆண்டவன், இ.பாலாஜி டி.எம். ஜோசப் மற்றும் பொது மக்கள் உடன் இருந்தனர்.

தாம்பரம் மாநகரம் மேற்குப் பகுதி சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் 100-வது பிறந்த நாள் விழா!

டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் -எஸ்.ஆர்.ராஜா நல உதவிகள் வழங்குகின்றனர்!

சென்னை, ஜூலை 10 -

தாம்பரம் மாநகரம் தாம்பரம் மேற்கு பகுதி திமுக சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 100 வது பிறந்த நாள் விழா பிரமாண்டமான பொது கூட்டமும் மற்றும் ஏழை ஏளிய மக்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கு விழா இன்று (10.7.23 திங்கட் கிழமை) மாலை 6.00 மணியாளவில் கிழக்கு தாம்பரம் பூண்டி பஜார் காந்தி பூங்கா அருகில் தாம்பரம் மேற்கு பகுதி கழகசெயலாளரும் மண்டலக் குழுத் தலைவரமான எஸ்.இந்திரன், தலைமையில் வி. முனுசாமி முன்னிலையில் வே. இராஜேந்திரன், பி. ஜோதிகுமார், எம். சினிவாசகுமார், எல். பேகம், டி.ஆர். நரசிம்மன், எ.நசீர், விஜி சிவகுமார், எ.லோகேஷ்குமார், கே. ரமேஷ்பாபு, எஸ் இளஞ்செழியன், டி.வி. முருகன், வி. லோகநாதன், கே.பிரபாகரன் ஆகியோரது வரவேற்பில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கழக பொருளாளர் பாராளுமன்ற கழக குழுத்தலைவர் டி.ஆர். பாலு , நெல்லிகுப்பம் புகழேந்தி , அமைச்சர் தா. மோ.அன்பரசன், மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

நிகழ்ச்சியில் மேயர் க.வசந்த குமாரி, பெருங்களத்தூர் தெற்கு பகுதி செயலாளர் மண்டலகுழு தலைவர் டி.காமராஜ், கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன், வீ.கார்திக், எஸ்.கார்திக், செ.முகுந்தன், எஸ். செல்வபிரகாஷ், மாமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.கோபி, ரமணி ஆதிமூலம் ,கொடி தாமோதரன், சசிகலா கார்திக், விங்கேஷ்வரி பாபு, செ.சுரேஷ்குமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர். மேலும் ஏழை எளிய பொதுமக்களுக்கு 1500 பேருக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கப்படுகிறது. எம் கமலவாணன் நன்றி கூறுகிறார்.

9 ஆம் ஆண்டு நினைவு நாள்

தோற்றம் 01.07.1933



மறைவு 10.07.2014

(முன்னாள் ஒன்றிய அவைத் தலைவர்)

பெரும்பாக்கம் **ச.தட்சணாமூர்த்தி** அவர்கள்

எமர்ஜென்சி காலத்திலே கருப்பு சிவப்பு துண்டோடு வீரநடை போட்டவர் என்று தலைவர் கலைஞரால் புகழப்பட்டவர்.

என்றும் உங்கள் நினைவுகளுடன் :–

மகன்கள் : **த.செந்தமிழ்ச்செல்வன்**

(நினைவில் வாழும்) **த.தமிழ்நேசன்** (மு.மா.பி)

மகள்கள் : **வி.பைந்தமிழ்ச்செல்வி**

பி.தமிழ்வாணி, சு.தமிழ்ச்செல்வி

மற்றும் மருமகன்கள், மருமகள்கள், பேரப் பிள்ளைகள்.